**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, MADURAI**

**M.C.O.P. No.2141/2019**

**R.W.4**

Deposition of Witness for the Respondent Solemnly affirmed by of this Court on **21.11.2025** in accordance with the Provisions of Evidence Act X of 1872.

| | | | |
|---|---|---|---|
| Name | காளிமுத்து | Father Name : | குண்டுமலை |
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | 33 |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு முதல் விசாரணை :</u>**

நான் மனுவில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். நான் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் முதுநிலை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு விவரம் தெரியும். எனது தரப்பு முதல் விசாரணை நிருபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். எங்கள் நிறுவனத்தில் வழங்கப்படும் பாலிசிகளுக்கான ( Product Code) ன் நகல் **எ.ம.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சரக்கு வாகனங்களுக்குரிய மாதிரி படிவம் **எ.ம.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எங்கள் நிறுவனத்தில் 16.03.2019ம் தேதி அனைத்து வகையான மோட்டார் காப்பீட்டு பாலிசுகள் அடங்கிய பாலிசி பிரிமியம் பதிவேட்டின் நகல் **எ.ம.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எங்கள் நிறுவனத்தில் ஏஜெண்ட்டுகளாக நியமிக்கப்பட்டவர்களின் பட்டியலின் நகல் **எ.ம.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக மனுதள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**<u>மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

மேற்படி (Product Code) பட்டியலை உறுதிபடுத்துவதற்குரிய காப்பீடு பாலிசி தாக்கல் செய்யவில்லை. Good Carriers Liability பாலிசியின் (Product Code) 2357 என்பதை காட்ட எந்த பாலிசியும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. **எ.ம.சா.ஆ.9** பாலிசியின் படிவம் என்றும் அது சம்மந்தப்பட்ட விபரங்கள் அது சம்மந்தப்பட்ட விபரங்கள்

நிரூபணவாக்குமூத்தில் குறிப்பிடவில்லை என்றால்ட சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் கணினியில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். மேற்படி கணினியில்இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட ஆவணங்களை உறுதிப்படுத்த எந்த சான்றிதழும் தாக்கல் செய்யவில்லை என்றால், பாலிசி வழங்கும் உரிமம் எங்களிடம் உள்ளதால் சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. எங்கள் காப்பீட்டு நிறுவனம் தனியார் நிறுவனம் என்பதால் மேற்படி ஆவணங்களை தயார் செய்து இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எங்கள் காப்பீட்டு நிறுவனத்தில் இருந்து கிராம அளவிலான தொழில் முனைவோர் மூலமாகவும் ஆன்லைன் மூலமாக பாலிசி எடுக்க முடியும் என்றால், நேரடியாகவோ அல்லது ஆன்லைன் மூலமாக பாலிசி எடுக்க முடியும். நான் தாக்கல் செய்துள்ள முகவர் பட்டியலில் கண்டுள்ள முகவர் மூலம் எங்கள் நிறுவனத்தில் இருந்து பாலிசி எடுக்க முடியும் என்றால் எடுக்க முடியும். மேலும், கிராம அளவிலான தொழில் முனைவோர் மூலமாகவும், எங்கள் நிறுவனத்திலிருந்து பாலிசி எடுக்க முடியும் என்று உண்மைக்கு மாறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர் தாக்கல் செய்துள்ள பாலிசி போலியானது என்று குறிப்பிட்டு காவல்துறை மூலமாக நடவடிக்கை எடுத்துள்ளோமா என்றால், 1ம் எதிர்மனுதாரர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நாங்கள் இந்த வழக்கு பாலிசி யார் மூலமாக வழங்கப்பட்டது என்று கண்டறிந்து அந்த நபர் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர் தாக்கல் செய்துள்ள பாலிசி

எங்கள் நிறுவனத்தில் இருந்து வழங்கப்பட்டது என்றும், எனவே மனுதாரர்களுக்கு எங்கள் நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

S/d - S.John Sundarlal Suresh, B.Sc., M.L.,
IV Additional District and Sessions Judge, Madurai.